

விக்கிரவாண்டி இடைதேர்தல் நடைபெறுவதை ஒட்டி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர். இராமசந்திரன் மற்றும் திராவிட முன்னேற்ற கழகத்தின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா, மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அவர்களும் ஒரத்தூர் பூத் பகுதியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார்கள். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு உள்ளார்.



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, உலகலாம்பூண்டி கிராமத்தில், நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணியின் சார்பாக கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் , விழுப்புரம் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் பொன்.கௌதம சிகாமணி, ஆகியோருடன் இணைந்து வாக்காளப் பெருமக்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர். உடன் வர்த்தக அணி மல்லாங்கிணறு போஸ் உள்ளார்.

## ரூ.250 கோடி முதலீட்டில்

# சென்னையில் உலகளாவிய புத்தாக்க மையம்!

### 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு!

சென்னை, ஜுலை 6-

சென்னையில் 250 கோடி ரூபாய் முதலீட்டில், உலகளாவிய புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையத்தை அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம் அமைத்துள்ளது. இதன் மூலம் நான்காயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட இருக்கின்றன.

மருத்துவத் துறையில் செயல்பட்டு வரும் அஸ்ட்ரா ஜெனிகா நிறுவனம், சென்னை தரமணியில் 250 கோடி ரூபாய் முதலீட்டில், உலகளாவிய புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப மையம் அமைத்துள்ளது. இதனை தமிழ்நாடு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்ட அவர், இந்தியாவின் அறிவு தலைநகரமாக தமிழ்நாடு திகழ்வதாக கூறினார். அஸ்ட்ரா ஜெனிகாவின் உலகளாவிய மையம் நான்காயிரம் வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய இடமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் மீண்டும் முதலீடு செய்து வளர வேண்டும் என்ற அந்நிறுவனத்தின் முடிவு, தமிழ்நாட்டு மக்களின் திறமைக்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்கு பார்வையின் கீழ் உலகளாவிய, புதுமை மற்றும் வளர்ச்சியை ஈர்க்கும் தன்மையை தமிழ்நாடு தொடர்ந்து உருவாக்கி வருவதாகவும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

## பாம்பன் சுவாமிகள் கோயில்

# குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க மறுப்பு!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜுலை 6-

திருவான்மியூர், அருள்மிகு பாம்பன் சுவாமிகள் திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க மறுத்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருவான்மியூர், அருள்மிகு பாம்பன் சுவாமிகள் திருக்கோயிலில் 12.7.2024 அன்று நடைபெறவுள்ள குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க கோரியும், மேற்கண்ட திருக்கோயிலில் மயூர வாகன சேவை திருவிழாவினை நடத்துவதற்கு எந்த சபைக்கு உரிமையுள்ளது என்பதை முடிவுசெய்திட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி இந்து சமய அறநிலையத்துறை சென்னை மண்டல இணை ஆணையரால் நடத்தப்படும் விசாரணையில் தங்களையும் அனுமதிக்கக் கோரியும் மயூரபுரம் குரு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாசர் அன்னதான சபையால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு நேற்று முன்தினம் (04.07.2024) நீதியரசர் திருமதி வி.பவானி சுப்பராயன் முன் விசாரணைக்கு வரப்பெற்றது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின் குடமுழுக்கு விழாவிற்கு தடைவிதிக்க மறுத்தும், மனுதாரர் குடமுழுக்கு விழாவில் கலந்துக்கொள்ளலாம் எனவும், குடமுழுக்கு விழாவில் இடையூறு ஏற்படுத்த கூடாது என உத்தரவிடப்பட்டது.

குடமுழுக்கு விழாவில் இடையூறு ஏற்படுத்த மாட்டேன் என மனுதாரர் சார்பில் உறுதியளிக்கப்பட்டது. அதனை பதிவு செய்துக்கொண்ட நீதிமன்றம், குடமுழுக்கு முடிந்த 2 வாரங்களுக்கு பிறகு இணை ஆணையரால் விசாரணை தொடங்கப்பட வேண்டும் எனவும், 6 மாத காலத்திற்குள் விசாரணை முடித்து உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் சென்னை உயர்நீதிமன்றத்தால் உத்தரவிட்டுள்ளது.

## தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவுச் சங்கங்களில்

# 63 லட்சம் உறுப்பினர்கள் பெயர் நீக்கம்!

### அ.தி.மு.க. ஆட்சியில் போலியாக சேர்க்கப்பட்டவர்கள்!

சென்னை, ஜுலை 6-

கடந்த 2018ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் போது கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடந்தது. அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் 5 ஆண்டாக இருந்த நிலையில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அவர்களின் பதவிக் காலத்தை 3 ஆண்டாக குறைத்து சட்ட மசோதா கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளிக்காததால் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் 5 ஆண்டு பதவியில் நீடித்தனர்.

இந்த நிலையில் பெரும்பாலானவர்களின் பதவிக் காலம் கடந்த ஆண்டு முடிந்து விட்ட நிலையில் கூட்டுறவு சங்கங்களுக்கு மீண்டும் தேர்தல் நடத்த தமிழக அரசு ஆயத்த பணிகளை மேற்கொண்டு வந்தது. இதற்காக கூட்டுறவு சங்கங்களின் வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்றது.

கூட்டுறவு சங்க உறுப்பினர்களில் இறந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களது ஆதார்கார்டு, ரேசன் கார்டுகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பலரும் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்திருந்தனர்.

ஆதார்கார்டு, ரேசன் கார்டுகளை சமர்ப்பிக்காதவர்கள் பெயர்கள் கூட்டுறவு சங்க வாக்காளர் பட்டியலில் இருந்து தற்போது நீக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் அ.தி.மு.க. ஆட்சியில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களில் 63 லட்சம் பேர் இப்போது நீக்கப்பட்டு உள்ளனர்.

இது குறித்து கூட்டுறவு சங்க அதிகாரி கூறுகையில், “கடந்த ஆட்சியில் சேர்க்கப்பட்டு தற்போது வரை மொத்தம் 1 கோடியே 90 லட்சத்து 26 ஆயிரத்து 152 பேர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 63 லட்சத்து 22 ஆயிரத்து 288 பேர் தகுதியற்றவர்கள் என கண்டறியப்பட்டதால் அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த, ஆதார் கார்டு ரேசன் அட்டை கட்டாயம் இணைக்க வேண்டும் என்று கூறி உள்ளோம். அதன் அடிப்படையில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடை பெற்று வருகிறது.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு வெற்றியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு கழக தேர்தல் பணிக்குழு தலைவர் அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் காணை பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்....உடன் தஞ்சை மாநகர செயலாளர், தஞ்சை மேயர் சண்.ராமநாதன், காணை குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் சத்தியராஜ் ,கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளானோர் கலந்துக்கொண்டனர்.

## 7ஆம் தேதி சிவகங்கை மாவட்ட அரசு குற்றவியல்

# வழக்கறிஞர் ஆ.அழகர்சாமி மகன் திருமணம்!

### அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. ஜுலை 6-

சிவகங்கை மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆ.அழகர்சாமி. இவர் சிவகங்கை நகர கழக முன்னாள் செயலாளர். இவரது மகன் அ.கார்த்தி கேயன் - சிவகங்கை எஸ்.வீரமணி வீ.இராமாயி மகள் வீ.ஜோதீஸ்வரி ஆகியோரது திருமணம் நாளை (7ம் தேதி ஞாயிற்றுக். கிழமை) காலை 7:15 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் சிவகங்கை ராயல் மஹாலில் மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெறுகிறது .

நகர் கழகச் செயலாளர் சி. எம் .துரை.ஆனந்த் வரவேற்றுப் பேசுகிறார் . இந்த திருமணத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து கட்சி தலைவர்கள், கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார்கள்.

மணவிழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஆ.அழகர்சாமி. ஆ.கதிரவன் திருமதி க. மதுபாலா மற்றும் உறவினர்கள் செய்து வருகிறார்கள்.

## ரூ.100 கோடி மதிப்பிலான நில அபகரிப்பு வழக்கு - தலைமறைவான

# முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை!

கரூர், ஜுலை 6-

100 கோடி ரூபாய் நில அபகரிப்பு வழக்கில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீடு மற்றும் அவரது ஆதரவாளர்கள் வீடுகளில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர்.

கரூரில் 100 கோடி மதிப்பிலான 22 ஏக்கர் நில அபகரிப்பு வழக்கில், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜய பாஸ்கர் தொடர்ந்து தலைமறைவாக உள்ளார். சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்கை விசாரித்து வரும் நிலையில், எந்தநேரமும் தாம் கைது செய்யப்படலாம் என்று கருதி, எம்.ஆர். விஜய பாஸ்கர் தொடர்ந்து தலைமறைவாகவே உள்ளார்.

இந்நிலையில், அவரது வீடு மற்றும் ஆதரவாளர்கள் வீடுகளில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர். வழக்கில் தொடர்புடைய தாளப்பட்டி கிராமத்தில் உள்ள யுவராஜ், தோட்டக்குறிச்சி கிராமத்தில் உள்ள செல்வராஜ் ஆகியோர் வீடுகளில் சோதனை நடைபெற்று வருகிறது.

## இராணிப்பேட்டை மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்

# பி.ஆர்.விமல் இல்லத் திருமண விழா!

### அமைச்சர் ஆர்.காந்தி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்துரை!

அரக்கோணம், ஜுலை 6-

இராணிப்பேட்டை மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பி.ஆர்.விமல், மேனகா விமல் ஆகியோரின் புதல்வர் வி.திருமூர்த்தி, ப.பாமினி ஆகியோரின் திருமண விழா 12.7.2024 வெள்ளிக்கிழமையன்று அரக்கோணத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் அமைச்சர் ஆர்.காந்தி, எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி, ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., அரக்கோணம் நகரச் செயலாளர் வி.எல்.ஜோதி ஆகியோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் இம்மண விழாவில் அரக்கோணம் நகர கழக துணை செயலாளர் ஏ.அன்பு லாரன்ஸ் மற்றும் வி.எஸ்.ஆர்.ரவிச்சந்திரன், என்.அரிகிருஷ்ணன், எம். கே.சிவா, பி.மூர்த்தி, ஏ.கே. சுந்தரமூர்த்தி, மு.கண்ணையன், ஜெயந்தி திருமூர்த்தி, எம்.பூபதி, அ.சோகன், எம். சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார், ஏ.வி. சாரதி, லட்சுமி பாரதி, கலாவதி, அன்புலாரன்ஸ், எஸ். வினோத், கே.பி.வெங்கடேசன், ஆர்.தமிழ்ச்செல்வன், பெ.வடிவேலு உள்பட கழக அனைத்து அணித் தோழர்கள் கலந்துகொள்கின்றனர்.



மதுரை மாநகர், மதுரை வடக்கு தெற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் ஒன்றிய அரசின் புதிய மூன்று சமஸ்கிருத கிரிமினல் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் அமைப்பாளர்கள் ஜெ தேவசேனன், சிவனேசன் ஆகியோர் தலைமையில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் கழக வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் அணியினர் வழக்கறிஞர்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி தி.மு.க. வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ. பம்பாதிரிப்பேட்டை கிராமத்தில் வாக்கு சேகரித்தார்.